


# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ அக்டோபர். 31, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 26 ❖ ரூ.10

## திருச்சி ராமஜெயம் கொலைவழக்கில் புலனாய்வுக்குழு சம்மன்

# வேகம்

## சாமி ரவி, சீர்காழி சத்யராஜ், கணேசன் உள்ளிட்ட 12 பேரிடம் உண்மை கண்டறியும் சோதனை நடத்த முடிவு விசாரணை வளையத்திற்குள் உள்ளவர்கள் கலக்கம்

திருச்சி, அக். 31–

திருச்சி ராமஜெயம் கொலை வழக்கில் முதற்கட்டமாக, 12 பேரிடம் உண்மை கண்டறியும் சோதனை நடத்த முடிவெடுத்துள்ள சிறப்பு புலனாய்வுக் குழு, அவர்கள் அனைவரும் நாளை நவம்பர் 1ம் தேதி நேரில் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பி உள்ளது.

திமுகவில் தற்போது அமைச்சராக இருக்கும் கே.என் நேருவின் தம்பி ராமஜெயம், கடந்த 2012ஆம் ஆண்டு மர்ம நபர்களால் கடத்தி கொலைசெய்யப்பட்டார். அவரது உடல் திருச்சி - கல்லணை சாலையில் உள்ள திருவளர்ச் சோலையில் காவிரி ஆற்றின் கரையோரம் கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் கிடந்தது.

இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் ,இது குறித்து ஸ்ரீரங்கம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.



இந்த வழக்கில் இதுவரை குற்றவாளிகள் யார், கொலை நடந்தது என்பது குறித்து எந்தத் தகவலும் காவல்துறையினருக்கு கிடைக்கவில்லை. இந்த நிலையில் பத்து ஆண்டுகளுக்கு பின் திமுக அரசு ஆட்சிக்கு வந்த பிறகு ராமஜெயத்தின் கொலை வழக்கு வேகம் எடுத்தது. எஸ்.பி ஜெயக்குமார் தலைமையிலான டி.எஸ்.பி மதன் மற்றும் ஆய்வாளர்கள் 40 பேர் கொண்ட சிறப்பு புலனாய் குழு விசாரணை மேற்கொண்டு வருகிறது.

மயிலாப்பூர் எம்.எல்.ஏ கொலை வழக்கில் தொடர்புடையதிண்டுக்கல் கணேசன் மற்றும் புதுக்கோட்டையைச் சேர்ந்த செந்தில்குமார் ஆகியோரிடம் சிறப்பு புலனாய்வு குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டனர். எஸ்.பி. ஜெயக்குமார் தலைமையிலான சிறப்பு புலன் விசாரணை குழுவினர் விசாரணை மேற்கொண்டனர். மேலும், திருவெறும்பூர் பழைய காவல் நிலையத்தில் வைத்து தனிப்படை போலீசார் விசாரணை செய்துவிட்டு, பின்னர் அவர்களை விடுவித்துள்ளனர்.

இந்த நிலையில் திருச்சி ராமஜெயம் கொலை வழக்கில் முதற்கட்டமாக, சாமி ரவி, சீர்காழி சத்யராஜ், கணேசன் உள்ளிட்ட 12 பேரிடம் உண்மை கண்டறியும் சோதனை நடத்த முடிவெடுத்துள்ள சிறப்பு புலனாய்வுக்குழு,அவர்கள் அனைவரும் வரும் செவ்வாய்க்கிழமை நேரில் திருச்சி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பி உள்ளது. தற்போது இந்த வழக்கு சூடு பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



▶ பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 115 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் அறுபதாவது குருபூஜை விழாவையொட்டி நேற்று ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் தமிழக அமைச்சர்கள் துரைமுருகன், கே என் நேரு, பெரியசாமி ஆகியோர், அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்வில் அமைச்சர்கள் ராமச்சந்திரன் தங்கம் தென்னரசு பெரிய கருப்பன் ராஜ கண்ணப்பன் மூர்த்தி அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாவட்ட கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் உதயநிதி ஸ்டாலின், காதர் பாட்ஷா, முத்துராமலிங்கம், முருகன், முத்துராஜா, கருமாணிக்கம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.

## விண்வெளி துறையில் இந்தியா அதிசயங்களை நிகழ்த்தி வருகிறது – பிரதமர் மோடி

புதுடெல்லி , அக். 31–

விண்வெளி துறையிலும், சூரிய மின்சக்தி உற்பத்தியிலும் இந்தியா அதிசயங்களை நிகழ்த்தி வருவதாக பிரதமர் மோடி தனது மன் கி பாத் உரையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது 94 வது மன்கி பாத் உரையில் மோடி பேசுகையில்: விண்வெளி துறையிலும், சூரிய மின்சக்தி உற்பத்தியிலும் நமது நாடு அதிசயங்களை நிகழ்த்தி வருகிறது. தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு, ஒரே நேரத்தில் 36 செயற்கைக்கோள்களை இந்தியா விண்வெளிக்கு அனுப்பியது. இதன் மூலம், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலும், கட்ச் முதல் கோஹிமா வரையிலும், நாடு முழுவதும் டிஜிட்டல் இணைப்பு மேலும் வலுப்படும்.

ஒரு காலத்தில் கிரையோஜெனிக் ராக்கெட் தொழில்நுட்பம் இந்தியாவுக்கு மறுக்கப்பட்டது. ஆனால் இன்று இந்திய விஞ்ஞானிகள் உள்நாட்டு தொழில்நுட்பத்தின்மூலம் கிரையோஜெனிக் ராக்கெட்டை உருவாக்கியது மட்டுமல்லாமல், அதன் உதவியுடன் இன்று அதிக எண்ணிக்கையில் செயற்கைக்கோள்களை ஒரே நேரத்தில் விண்வெளிக்கு அனுப்பி வருகின்றனர். இதற்கான உலக சந்தையில் இந்தியா தற்போது வலிமை பெற்று வருகிறது. இந்தியாவிற்கு புதிய வாய்ப்புகளின் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.



உலகம் முழுவதும் சூரிய மின்சக்தியை எதிர்காலமாக பார்க்கிறது. இந்தியா தனது பாரம்பரிய அனுபவங்களை நவீன அறிவியலுடன் இணைத்து வருகிறது, அதனால்தான், இன்று, சூரிய சக்தியில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாக நாம் மாறி இருக்கிறோம். நமது நாட்டில் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கையை சூரிய ஆற்றல் எவ்வாறு மாற்றுகிறது என்பதும் ஆய்வுப் பொருளாகி வருகிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## அறந்தாங்கியில் பாஜக சார்பாக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழா அனுசரிப்பு

அறந்தாங்கி, அக்.31–

அறந்தாங்கியில் பாரத ஜனதா கட்சியின் சார்பாக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு அம்மா உணவகம் எதிரே பாஜக மாவட்ட தலைவர், முத்துராமலிங்கத் தேவர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி பாஜக சார்பில் பசும்பொன்



முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட பாஜக தலைவர் செல்வம் அழகப்பன் அம்மா உணவகம் எதிரே முத்துராமலிங்கத் தேவர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் நகரத் தலைவர் மீனாள் இளங்கோவன், மாவட்ட பொதுச்செயலாளர்கள் முரளிதரன், பார்த்திபன், மாவட்ட பொருளாளர் அம்பாள் சுகன்யா, மாவட்ட துணைத் தலைவர் சந்தானம், நகர நிர்வாகிகள் அண்ணாமலை, பாபுராஜ் மாவட்ட விளையாட்டு பிரிவு துணைத் தலைவர் சிவபாலன் மற்றும் பாஜக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சோமாலியாவில் சக்தி வாய்ந்த இரட்டை கார் குண்டுவெடிப்பு ஊடகவியலாளர் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் பலி!

சோமாலியா , அக்.31–

கிழக்கு ஆப்ரிக்கா நாடான சோமாலியா தலைநகர் மோகதீஷுவில் நேற்று முன்தினம் இரவு அடுத்தடுத்து இரு குண்டுவெடிப்பு சம்பவங்கள் அரங்கேறின.

மோகதீஷுவில் உள்ள கல்வி அமைச்சகத்தின் முன் நின்று கொண்டிருந்த கார் வெடித்துவிபத்துக்குள்ளானது. இதில் அங்கிருந்த பொது மக்கள் பலர் உடல் சிதறி உயிரிழந்தனர். உடனடியாக அங்கு மீட்பு பணிகள் நடைபெற்றுவந்த நிலையில், நின்றுகொண்டிருந்த மற்றொரு காரில் குண்டுவெடித்தது.

இந்த கோர நிகழ்வில் இதுவரை 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக அந்நாட்டின் அதிபர் ஹஸ்சன் ஷேக் முகமது தெரிவித்துள்ளார். சம்பவ இடத்திற்கு விரைந்து ஆய்வு செய்த அவர், 'இந்த தாக்குதலில் குழந்தைகள், பெண்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் பலியாகினர். இது வேதனை அளிக்கிறது' என்றார். இந்த தாக்குதலுக்கு எந்த பயங்கரவாத இயக்கமும் பொறுப்பேற்காத நிலையில், அல்கொய்தா ஆதரவு பெற்ற அல் ஷபாப் என்ற அமைப்புதான் தாக்குதலை நிகழ்தியிருக்கக் கூடும் என அதிபர் ஹஸ்சன் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இந்த இந்த இரட்டை கார் குண்டுவெடிப்பு தாக்குதலில் ஊடகவியலாளர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

இதே இடத்தில் தான் 2017ஆம் ஆண்டு மிகச் சக்தி வாய்ந்த குண்டுவெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அல்கொய்தா ஆதரவு பெற்ற அல் ஷபாப் பயங்கரவாத அமைப்பு சோமாலியாவில் தீவிரமாக இயங்கி வருகிறது. சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட சோமாலியா அரசை கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் இந்த அமைப்பு, பொதுமக்கள் மற்றும் பாதுகாப்பு படையிரை குறிவைத்து தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

மேலும் உலகிலேயே செய்தியாளர்களுக்கு அச்சுறுத்தலான நாடாக சோமாலியா பார்க்கப்படுகிறது. 2010ஆம் ஆண்டு தொடங்கி அல் ஷபாப் அமைப்பு நடத்திய தாக்குதல்களில் சிக்கி 50க்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் கொல்லப்பட்டதாக Reporters Without Borders அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## மதச்சார்பின்மைக்கு எதிராகப் பேசுவதா ? தமிழக ஆளுநருக்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்கள் கண்டனம்

சென்னை , அக்.31–

'எந்த ஒரு நாடும் ஏதாவது ஒரு மதத்தைச் சார்ந்துதான் இருக்க முடியும்; இதில் இந்தியா விதிவிலக்கு அல்ல' என்று ஆளுநர் ஆர்.என். ரவி பேசியதற்கு திமுக உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.

திமுக, மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள், காங்கிரஸ், மனித நேய மக்கள் கட்சி, முஸ்லீம் லீக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள கூட்டறிக்கை:

தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்றது முதல், நாள்தோறும் ஏதாவது சர்ச்சைக்குரிய கருத்தைச் சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அதற்குக் காரணம், தமிழ்நாட்டில் தேவையற்ற வீண் சர்ச்சைகளை உருவாக்கி குழப்பம் ஏற்படுத்தும் நோக்கமா, அல்லது தன்னை நோக்கிய கவனிப்பு எப்போதும் இருக்க வேண்டும் என்ற தாகமா எனத் தெரியவில்லை.

எதுவாக இருந்தாலும், சனாதனம், ஆரியம், திராவிடம், பட்டியலின மக்கள், திருக்குறள் ஆகியவை குறித்து அவர் கூறும் கருத்துகள் அபத்தமானவையாகவும், ஆபத்தானவையாகவும் இருக்கின்றன. ஆளுநரின் தனிப்பட்ட ஆன்மீக நம்பிக்கைகள் குறித்து நமக்கு எந்த விமர்சனமும் இல்லை; அது பற்றி கவலைப்படவுமில்லை. ஆனால்,அரசியலமைப்புச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆளுநர் பதவியில் இருந்து கொண்டு, பழமைவாத நச்சரவங்களை நாட்டில் நடமாட விடுவது அவருக்கும் அழகல்ல; அவர் வகிக்கும் பதவிக்கும் அழகல்ல!

அவர் உதிர்க்கும் அபத்த வகை கருத்துகளுக்கு எதிராகப் பலராலும் சொல்லப்படும் விளக்கங்களை அவர் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. தன்னை மாற்றிக்கொண்டதாகவும் தெரியவில்லை. வழக்கம் போல,தனது பேச்சுகளைத் தொடர்ந்து கொண்டே வருகிறார் ஆளுநர்.

இந்த வரிசையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமாகவே ஆளுநர் பேசத் துணிந்து விட்டார். அது அவர் எடுத்துக்கொண்ட பதவிப் பிரமாணத்திற்கே



எதிரானதுஎன்பதையாவது உணர்ந்துதான் பேசுகிறாரா?

"இந்தியாவை மதச்சார்பற்ற நாடு எனச் சொல்கின்றனர். எந்த ஒரு நாடும் ஏதாவது ஒரு மதத்தைச் சார்ந்துதான் இருக்க முடியும். அதில் இந்தியா விதிவிலக்கு அல்ல" என்று பேசி இருக்கிறார் ஆளுநர்.

அதேபோல் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரைக்கு எதிராக ஆளுநர் பேசுவதையும், கருத்து சொல்வதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். 'மதச்சார்பற்ற' நாடு இது என்கிறது அரசியலமைப்புச்சட்டம். ஒருமதத்துக்குவக்காலத்து வாங்குபவராக ஆளுநர் தன்னைக் காட்டிக் கொள்கிறார். இதுவே அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. அனைத்து மதங்களுக்கும் நடுநிலையானவராகவே ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும். அனைத்து மதங்களுக்கும் சமமான உரிமைகளே உண்டு என்கிறது இந்திய அரசியலமைப்புச்சட்டம்.

அனைத்து மதத்தவரும் சமம் (14), மதத்தில் பாகுபாடு கூடாது (15), அனைவருக்கும் சமமான உரிமை (16), விரும்பும் மதத்தைப் பின்பற்றுவதற்கு உரிமை (25), தங்களது மதத்தைப் பிரச்சாரம் செய்யும் உரிமை (26), மதத்தை வளர்க்க வரி செலுத்தத் தேவை இல்லை (27), அரசு நிறுவனங்களில் மதக் கல்வி கூடாது (28), சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் நடத்த உரிமை (30), மதம் தாண்டிய இணக்கம்,சகோதரத்துவம் பரப்புவது ஒவ்வொரு குடிமகனின் கடமை, மத அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் விடுபடுதல் இருக்கக் கூடாது (325) - இவை அனைத்தும் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளவை. இவை அனைத்துக்கும் எதிராகப் பேசுகிறார் ஆளுநர்.

எஸ்.ஆர்.பொம்மை எதிர் இந்திய ஒன்றியம் வழக்கில் தீர்ப்பளித்த ஒன்பது நீதிபதிகள் கொண்ட அரசியல்சாசன அமர்வு,மதச்சார்பின்மைக் கொள்கையை நமது அரசியல் சாசனத்தின் அடிப்படையான பண்புகளில் ஒன்றாகச் சொல்கிறது. அரசு நடவடிக்கைகளில் மதச்சார்புகூடாதுஎன்றும், மதம் சார்ந்ததாக மாநில அரசு செயல்பட்டால் அதனைக் கலைக்கலாம் என்றும் நீதியரசர்கள் சொன்னார்கள். அந்த வகையில் ஆளுநர் , உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு முரணாகப் பேசுகிறார்.

இவை அனைத்தும் தெரிந்தே, வேண்டுமென்றே குழப்பம் ஏற்படுத்தும் எண்ணத்தோடு ஆளுநர் பேசுகிறார்கள் என்றே பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறோம்;கண்டனம் தெரிவிக்கிறோம்.

ஆளுநர் பொறுப்பில் இருந்துகொண்டு பேசுவதால்தான் இந்தளவுக்கு இதற்கு முக்கியத்துவம் தர வேண்டி உள்ளது.இதனை விடப் பெரிய பதவி எதையாவதுஎதிர்பார்த்து பா.ஜ.க. தலைமையை மகிழ்விக்க ஆர்.என்.ரவி இப்படிப் பேசுவதாக இருந்தால், அவர் தனது ஆளுநர் பதவியை விட்டு விலகிவிட்டு,இதுபோன்ற கருத்துகளைச் சொல்லட்டும். மாறாக, அப்பொறுப்பில் இருந்துகொண்டு பேசுவதை இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நிச்சயம் ஓர்நாள்
நமக்கே திரும்பும்
என்பதை நினைவில்
கொண்டால்......
காயப்படுத்தும்
எண்ணம் யாருக்கும்
தோன்றாது...!




| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,705 | Rs.5,107 |

# புதுக்கோட்டையில் பி.யு.சின்னப்பா பேரவை சார்பில் தேவர் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது



புதுக்கோட்டை , அக். 31–

புதுக்கோட்டையில் பி.யு. சின்னப்பா பேரவை சார்பில் தேவர் ஜெயந்தி விழா அண்ணா சிலை அருகில் நேற்று கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு பாஜக தொழில்துறை பிரிவு மாநில செயலாளர் ஏவிசிசிகணேசன் தலைமை தாங்கினார். பி யு சின்னப்பா சிலை அமைப்பு குழு தலைவர் துரை மதிவாணன், மூவேந்தர் முன்னணி கழக மாவட்ட தலைவர் மாரையாபட்டி செல்வராஜ், பி.யு சின்னப்பா பேரவை அமைப்பாளர் சிவசண்முகராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் தேவர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.பின்னர் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர்.தொடர்ந்து, ஆன்மீக சமூக பணிகளில் ஈடுபட்ட பல்வேறு தரப்பினர்க்கு பரிசுகள் வழங்கி பாராட்டி, குருபூஜைக்காக வாகனங்களில் பசும்பொன் சென்ற இளைஞர்களுக்கு சால்வை அணிவித்து வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

# தி.மலை அண்ணாமலையார் கோயிலில் நெய் காணிக்கை சிறப்பு கவுன்டர் தொடக்கம்: இணையதளம் வழியாகவும் செலுத்த ஏற்பாடு



தி.மலை , அக். 31–

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கார்த்திகை தீபத் திருவிழாவுக்காக நெய் காணிக்கை சிறப்பு கவுன்டர் தொடங்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கார்த்திகை தீபத் திருவிழா, காவல் தெய்வமான துர்க்கை அம்மன் உற்சவத்துடன் நவம்பர் 24-ம் தேதி தொடங்குகிறது.விழாவின் முக்கிய நிகழ்வாக, 2,668 அடி உயரம் உள்ள அண்ணாமலை உச்சியில் டிசம்பர் 6-ம் தேதி மகா தீபம் ஏற்றப்பட உள்ளது. மகா தீப தரிசனத்தை 11 நாட்களுக்கு தொடர்ந்து காணலாம். இதற்காக, சுமார் 3,500 கிலோ நெய் பயன்படுத்தப்படுகிறது.

மகா தீப நெய் காணிக்கையை, காலம் காலமாகபக்தர்கள்வழங்கி வருகின்றனர். இதற்காக, அண்ணாமலையார் கோயிலில் அமைக்கப்படும் சிறப்பு கவுண்டர்களில் நெய் காணிக்கைக்கான தொகையை பக்தர்கள் செலுத்துவது வழக்கம். அதன்படி, இந்தாண்டும் நெய் காணிக்கைக்கான சிறப்பு கவுன்டர், அண்ணாமலையார் கோயிலில் உள்ள இணை ஆணையர் அலுவலகம் முன்பு அமைக்கப்பட்டுள்ளது.

ஒருகிலோ நெய் விலை - ரூ.250, 500 கிராம் நெய் விலை ரூ.150 மற்றும் 250 கிராம் நெய் விலை ரூ.80 என நிர்ணயிக்கப்பட்டு, பக்தர்களிடம் இருந்து காணிக்கை தொகை பெறப்படுகிறது. நெய் காணிக்கை தொகையை வழங்கும் பக்தர்களுக்கு டோக்கன் கொடுக்கப்படுகிறது.இந்த டோக்கனை கொடுத்து, ஆருத்ரா தரிசனத்துக்குப் பிறகு, 'தீப மை' பிரசாதத்தை பக்தர்கள் பெற்றுக்கொள்ளலாம். மேலும், http://annamalaiyar.hrce.tn.gov.inஎன்ற கோயில் இணையதளத்திலும்,நெய் காணிக்கை தொகையை செலுத்தலாம் என கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தேவி கன்ஸ்ட்ரக்ஸன்
ENGINEERS - BUILDERS - VALUERS & PROMOTORS
West Main Street, (Opp : BSNL Office), PUDUKKOTTAI.
Cell : 94 43 12 04 67, 90 80 90 20 03
☎ (04322) 220467
Er. N.KANAGARAJAN, B.E.,M.I.E.,F.I.V.,PGDQSV.,M.Sc.(val)
Approved Valuer, Charted Engineer & Government Approved Panel Engineer

# தென் கொரியாவில் ஹாலோவின் கொண்டாட்டத்தின்போது கூட்ட நெரிசலில் சிக்கி 151 பேர் உயிரிழப்பு



சியோல், அக். 31–

தென் கொரிய தலைநகர் சியோலில் நடைபெற்ற ஹாலோவீன் கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 151 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

கிறிஸ்தவ மதத்தில் புனிதர்களாகக் கருதப்படுபவர்களுக்கான தினமாக ஆண்டுதோறும் அக்டோபர் 31ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இந்த தினத்தை ஒட்டி கிறிஸ்தவர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபடுவது வழக்கம். ஹாலோஸ் ஈவ் என்ற இந்த கொண்டாட்டம் சியோலின் மத்தியில் உள்ள இதேவோன் மாவட்டத்தில் நேற்றிரவு கொண்டாடப்பட்டது. குறுகிய தெருக்கள் நிறைந்த இந்த பகுதியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர்தெருக்களில் கூடி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 151 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கும்மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பலர் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். 270 பேர் காணாமல் போனதாகக் கூறப்படுவதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

மாரடைப்பு காரணமாகமயக்கமடைந்த ஏராளமானவர்களை வீதியிலேயே கிடத்தி அவர்களுக்கு அருகில் உள்ளவர்கள் முதலுதவி செய்யும் வீடியோ காட்சிகள் சோகத்தை ஏற்படுத்துவதாக உள்ளன. பாதிப்பு குறித்த தகவல் கிடைக்கப் பெற்றதை அடுத்து,அங்குஏராளமான போலீசாரும்,தீயணைப்புத் துறை காவலர்களும் குவிக்கப்பட்டனர். உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைப்பது, காயமடைந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவர்களை மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைப்பது, கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துவது உள்ளிட்ட பணிகளை அவர்கள்துரிதப்படுத்தினர்.

இந்த சம்பவம் தென் கொரியாவில் மிகப் பெரிய சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. உயிரிழந்தவர்களில் பலரும் இளைஞர்கள் என கூறப்படுகிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள தென் கொரிய அதிபர் யோன் சுக் யோல், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துதெரிவித்துள்ளார். மேலும், நேற்று ஞாயிற்றுக்கிழமை துக்க தினமாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இதையடுத்து அந்த நாட்டின்தேசியக்கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.இந்த விபத்துக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் உள்ளிட்டோர் ஆழ்ந்த வேதனை தெரிவித்துள்ளனர்.

# சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் சூரசம்கார நிகழ்ச்சி



ஊத்துக்கோட்டை, அக்31–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்றழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் ஒன்று உள்ளது.

இக்கோவில் அருணகிரிநாதரால் பாடல் பெற்ற திருக்கோவில் ஆகும். மேலும்,ராமனிடம் அவரது மகன்களான லவா மற்றும் குசா என இரண்டு சிறுவர்கள் அம்பு எடுத்து போரிட்டதால் இந்த ஊருக்கு சிறுவாபுரி என்று பெயர் வந்ததாக கூறப்படுகிறது. இக்கோவிலுக்கு தொடர்ந்து ஆறு வாரங்கள் வந்து விளக்கேற்றி வழிபட்டால் வீடு,மனை,உத்தியோகம், வியாபாரம்,திருமணயோகம் உள்ளிட்டவை தடையின்றி கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. இவ்வாறு சிறப்புமிக்க,இந்த கோவிலுக்கு 19 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி ரூ.ஒரு கோடியே 25 லட்சம் செலவில் திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.


எனவே, தொடர்ந்து 48 நாட்கள் மண்டலபிஷேகம் நடைபெற்றது.இம்மாதம் 8-ம் தேதி மண்டலபிஷேக நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிலையில், இந்த கோவிலில் கொரோனா நோய் தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த கந்த சஷ்டி விழா கடந்த 25-ம் தேதி துவங்கியது. எனவே, அன்று காலை கொடியேற்றத்துடன் விழா துவங்கியது.

இதன் பின்னர்,உற்சவர் வள்ளி - தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி உள்புறப்பாடு நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது.கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு நாள்தோறும் கோவில் வளாகத்தில் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை நடைபெற்றது. இந்நிலையில், நேற்று முன் தினம் ஸ்ரீ சண்முகப் பெருமாளுக்கு அபிஷேகமும், அன்றுமாலை வேல் வாங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதன் பின்னர், பத்மாசூரனை வதம் செய்யும் நிகழ்ச்சியான சூரசம்ஹார நிகழ்ச்சி கோவில் எதிரே சன்னதி தெருவில் நடைபெற்றது. கொடி இறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை கோயில் தக்கார் சித்ராதேவி தலைமையில்,கோவில் நிர்வாக அதிகாரி செந்தில்குமார் மற்றும் பணியாளர்கள் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



தமிழக முன்னாள் முதலமைச்சர், சட்டபேரவை எதிர்கட்சி தலைவர், எடப்பாடி கே.பழனிசாமி ஆலோசனைபடி, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் ஆரணி சட்டமன்ற தொகுதி ஆரணி நகரத்தில் தேசியத்தையும், தெய்வீகத்தையும் இரு கண்களாகக் கொண்டு வையகம் போற்ற வாழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் பிறந்தநாள் மற்றும் குருபூஜை நாளில் அவரது திருவுருவப்படத்திற்கு முன்னாள் அமைச்சர், ஆரணி சட்டமன்ற உறுப்பினர், அதிமுக அமைப்பு செயலாளர் சேவூர் எஸ்.இராமச்சந்திரன், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அதிமுக செயலாளர் முன்னாள் செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் தூசி கே.மோகன் நேரில் சென்று மலர்தூவி,மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கினார். நிகழ்வில் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூராட்சி, கூட்டுறவு, உள்ளாட்சி, அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மதுரையில் விரைவில் 5 கி.மீ. நீளம்கொண்ட புதிய பறக்கும் பாலம் – நெடுஞ்சாலைத்துறை தகவல்



மதுரை , அக். 31–

மதுரை தெற்கு வாசல் பாலத்தால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்குதீர்வு காணும் நோக்கில், அதன் அருகே நெல்பேட்டை முதல் அவனியாபுரம் வரை 5 கி.மீ தொலைவிற்கு மற்றொரு பாலம் அமைப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மதுரை தெற்குவாசல் - வில்லாபுரம் சாலையில் ரயில்வே வழித்தடத்தை கடப்பதற்காக தெற்கு வாசல் மேம்பாலம் உள்ளது. இந்த பாலம், 1989ம் ஆண்டு 500 மீட்டர் நீளத்தில், 12 மீட்டர் அகலத்தில் ரூ.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது. அப்போதைய முதல்வர் கருணாநிதி இந்த பாலத்தை திறந்து வைத்தார்.

இந்த பாலம் இரு வழித்தடத்தில் வாகனங்கள் செல்லும் வகையில் கட்டப்பட்டது. தற்போது இந்த பாலத்தில் பீக் அவரில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. பாலம் குறுகலாக உள்ளதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. இந்த பாலத்தை அகலப்படுத்த நில ஆர்ஜிதம் செய்ய வசதியில்லாததால் ஈரடுக்கு பாலமாக மாற்றி அமைக்கப்படும் என கடந்த அதிமுக ஆட்சியின் போது கூறப்பட்டது. எனினும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பாலம் போதிய பராமரிப்பு இல்லாமல் சிதலமடைந்துள்ளது.

இது குறித்து நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, ''பாலம் விரைவில் பராமரிக்கப்பட உள்ளது. பாலத்தின் உயரத்தை உயர்த்த வேண்டும் என தெற்கு ரயில்வே கேட்டுக்கொண்டதால், பாலத்தை உயர்த்தவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாலம் வலுவாக இருப்பதால், அதனை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் திட்டம் இல்லை. எனினும், பாலத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க, அதன் அருகிலேயே நில ஆர்ஜிதம் செய்து மற்றொரு பாலம் அமைக்கும் திட்டம் உள்ளது. இந்த புதிய பாலம்நெல்பேட்டையில் இருந்து ஆரம்பித்து அவனியாபுரம்வரை 5.கி. மீ. தூரம் கொண்டதாக இருக்கும். இந்த பாலம் அமைக்கப்பட்ட பிறகு இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் இருக்காது. புதிய பாலத்திற்கான ஆய்வுகள், ஆலோசனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' என தெரிவித்தனர்.

# ஆவுடையார்கோவில் பகுதியில் இரவோடு இரவாக ஆடுகள் திருடு போனதால் பரபரப்பு



ஆவுடையார்கோவில், அக்.31–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே உள்ள மாவடி கோட்டை கிராமத்தில் சேகர் என்பவருக்கு சொந்தமான சுமார் 10 ஆடுகளை இரவோடு இரவாக கட்டியிருந்த இடத்தில் கயிருகளை அறுத்துவிட்டு ஆடுகளைச் சென்று விட்டனர், அது குறித்து நாகுடி காவல் துறையில் புகார் மனு அளிக்கப்பட்டது.

அது சம்பந்தமாக சேகர் என்பவர் கூறுகையில், என்னுடைய வாழ்வாதாரமே இந்த ஆடுகள் தான் இந்த ஆடுகளை வைத்து தான் குடும்பம் நடத்தி வருகின்றேன் அதனால் அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு ஆடுகளை மீட்டுத் தருமாறு கோரிக்கை வைக்கின்றார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னால் புதுக்கோட்டை அருகே ஆடுகள் திருடு போனதை காவல்துறை உதவி ஆய்வாளர் திருடர்களை விரட்டிச் செல்லும் பொழுது திருடர்கள் காவல் உதவி ஆய்வாளரை தாக்கி கொன்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது, அதேபோல் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஆவுடையார் கோவில்அருகே பெருங்குடி ஆவணம் பகுதியில் ஆடுகள் திருடு போயின, மீமிசல் அருகில் உள்ள கிளாறிவயல் கிராமத்தில் ஆடு திருடு போயின என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோல் தொடர்ந்து இப்பகுதியில் ஆடு திருடு போவது வாடிக்கையாகியுள்ளது, அந்த குற்றவாளிகளை காவல்துறையினர் பிடித்து உடனடியாக ஆடுகைளைமீட்டு குற்றவாளிகளை கைது செய்து சிறையில் அடைக்க பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

# உள்ளாட்சி கடைகள் ஒதுக்கீட்டுக்கு நகராட்சி நிர்வாகத் துறை செயலர் தலைமையில் குழு

சென்னை, அக். 31–

உள்ளாட்சி அமைப்புகளின் கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் ஒதுக்கீட்டை முறைப்படுத்த நகராட்சி நிர்வாகத் துறை செயலர் தலைமையில் வழிகாட்டுதல் குழு அமைக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறஉள்ளாட்சிகளின் கடைகளை வாடகைக்கு விடுதல், காலி நிலத்தை குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றை முறைப்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு வலியுறுத்தி வந்தது. இந்நிலையில் நகராட்சி நிர்வாகத் துறை செயலர் சிவ் தாஸ் மீனா தலைமையில் 8 உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டுதல் குழுவை அமைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதில், நகராட்சி நிர்வாகத் துறை செயலர் தலைவராகவும், சென்னை மாநகராட்சி ஆணையர், துணை ஆணையர் (வருவாய்), பேரூராட்சிகள் ஆணையர், நகராட்சி நிர்வாக இயக்குநரக இணை ஆணையர், பேரூராட்சி ஆணையரக இணைய ஆணையர் மற்றும் வணிகர் சங்க பிரதிநிதிகள் என்ற முறையில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில பொதுச்செயலாளர் வெ.கோவிந்தராஜுலு, வேலூர் மாவட்டத் தலைவர் இரா.ப.ஞானவேல் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த குழு, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு சொந்தமான நிலங்கள், கட்டிடங்களுக்கான குத்தகை இனங்களுக்கு நியாயமான வாடகை மற்றும் இடத்துக்கேற்ற முன்வைப்புத் தொகை நிர்ணயம் செய்ய உதவுதல், நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு சொந்தமான வருவாய் ஈட்டும் சொத்துகளை ஏலம் விடுவது குறித்த வழிமுறைகள் வகுப்பது, குத்தகை, வாடகை மறு நிர்ணயம் செய்தலுக்கு கால இடைவெளி அளவை நிர்ணயம் செய்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வணிகர் சங்க பிரதிநிதிகள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டதற்காக, முதல்வர் ஸ்டாலினுக்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா நன்றி தெரிவித்துள்ளார்.

Marlin Marbles
• Cements • Steels • Marbles • Granites • Tiles
99526 52396 / 94431 66264
Alangudi Main Road, Pudukkottai - 622 001.
E-mail : marlingranite12@gmail.com

### பாலவாக்கம் கிராமத்தில் காணாமல் போன

# மருமகள் மற்றும் பேரன்-பேத்திகளை கண்டுபிடித்து தருமாறு மாமியார் காவல் நிலையத்தில் புகார்

ஊத்துக்கோட்டை, அக்31-

திருவள்ளூர் மாவட்டம்,எல்லாபுரம் ஒன்றியம்,பாலவாக்கம் கிராமம், இருளர் காலனியில் வசித்து வந்தவர் காலம் சென்ற மாணிக்கம்ஆவார்.இவரது மனைவி நாகம்மாள் (வயது35), மகன் பார்த்திபன் (வயது11),மகள்கள் சுகுணா (வயது 10),சுமித்ரா(வயது10) ஆகியோர் ஆவர்.

இந்நிலையில்,நேற்று முன்தினம் தனது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டு வருவதாக நாகம்மாள் வீட்டில் இருந்த தனது மாமியார் மல்லிகா என்பவரிடம் கூறிவிட்டு சென்றார்.பின்னர்,வீடு திரும்பவில்லை. பல்வேறு இடங்களில் தேடியும் மருமகள், பேரன், பேத்திகள் கிடைக்கவில்லையாம். எனவே,காணாமல்போன தனது மருமகள் மற்றும் பேரன், பேத்திகளை கண்டுபிடித்து தருமாறு மூதாட்டி மல்லிகா நேற்று மாலை ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தார்.

எனவே, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏழுமலை உத்தரவின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து இச்சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

### தேவர் ஜெயந்தியையொட்டி

# முத்துராமலிங்க தேவருக்கு வெள்ளிக் கவசம் வழங்கினார் ஓபிஎஸ்



ராமநாதபுரம், அக்.31-

தேவர் ஜெயந்தியையொட்டி முத்துராமலிங்கதேவருக்கு முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் வெள்ளிக் கவசம் வழங்கி மரியாதைசெலுத்தினார்.

பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவருக்கு அவரின் 115 ஆவது பிறந்தநாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு மரியாதை செலுத்திய பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஓ. பன்னீர்செல்வத்திடம் முத்துராமலிங்க தேவருக்கு தாங்கள் வெள்ளி கவசத்தை வழங்கி உள்ளீர்கள் தனிப்பட்ட முறையில் வழங்கினீர்களா அல்லது அதிமுக சார்பில் வழங்கினீர்களா என கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அவர் சமீபத்தில் தேவர் தங்க கவசம் மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கிய தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு. அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் நான்தான் அதிமுக சார்பிலே வெள்ளி கவசத்தை வழங்கி உள்ளேன். வெள்ளி கவசம் பத்து புள்ளி நாலு கிலோ எடை கொண்டது. ஒன்றரை கோடி தொண்டர்கள் அனைவரும் ஒன்று அணிய வேண்டும் என்று தான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன் என தெரிவித்தார்.

# திருவரங்குளம் அருகே சாலையை கடக்க முயன்ற சிறுமி டிப்பர் லாரி மோதியதில் உடல் நசுங்கி பலி

திருவரங்குளம்,அக்.31-

புதுக்கோட்டை மாவட்டம்திருவரங்குளம் அருகேஉள்ளபூவரசங்குடி ஊராட்சி, சத்திரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பாலு காளியம்மாள் இவர்களது மகள் காயத்ரி(13), பூவரசங்குடி அரசு பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வந்தார். இவர் நேற்று பள்ளி விடுமுறை என்பதால் வீட்டில் இருந்துள்ளார், இவர் வீட்டின் அருகே அறந்தாங்கி சாலையை கடக்க முயன்ற போது புதுக்கோட்டையில் இருந்து அறந்தாங்கி நோக்கி சென்ற டிப்பர் லாரி சிறுமி மீது மோதியதில் அவர் சம்பவ



இடத்திலேயே உடல் நசுங்கி பலியானார்.

தகவல் அறிந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் பொதுமக்கள் தப்பி ஓடிய டிப்பர் லாரி டிரைவரை கைது செய்ய கூறி சாலை மறியல் போராட்டம் நடத்தினர், தகவல் அறிந்த வல்லத்ராகோட்டை போலீசார் பேச்சு வார்த்தை நடத்தி சாலை மறியல் போராட்டத்தை கைவிடச் செய்தனர், சிறுமியின் உடல் பிரேதபரிசோதனைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது

இது சம்பந்தமாக டிப்பர் லாரி டிரைவர் தங்கராசு என்பவர் கைது செய்யப்பட்டு அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது, டிப்பர் லாரிமோதிபள்ளிமாணவி உடல் நசுங்கி இறந்த சம்பவம் அப்பதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கறம்பக்குடி அருகே மழையூர் அரசு மகளிர் பள்ளி மாணவர்களுக்கு விடுதி அமைக்க கோரிக்கை

கறம்பக்குடி, அக். 31-

மழையூரில் அரசு மகளிர் பள்ளி மாணவர்களுக்கு விடுதி அமைக்க பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூரில் அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கிவருகிறது, 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை 1073 மாணவ மாணவியா் பயின்று வருகின்றனா். இதில் 500க்கும் மேற்பட்ட மாணவியா் பயின்று வருகின்றனா், சுற்றுவட்டாரத்தில் செயல்படும் தொடக்க பள்ளி,நடுநிலைப்பள்ளி ,உயா்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவா்கள் மேல்நிலைகல்விக்கு மழையூா்அரசுமேல்நிலைப் பள்ளிக்குத்தான் வரவேண்டும்.

தாலுகாவில் அதிக மாணவ, மாணவியா் பயிலும் பள்ளியாகவும் மழையூா பள்ளி விளங்குகிறது, மழையூரில் அரசுபள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு தங்கும் விடுதி இல்லாததால் மிகுந்த சிரமத்துடனேயே வந்து செல்கின்றனா், எனவே மாணவிகளின் கல்வி தரத்தை மேம்படுத்த தனியாக அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி அமைக்கவும்,அரசுமகளிர் விடுதி அமைத்து தரவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனா்.









▶ வேலூர் மாவட்டம், அணைகட்டு தாலுகா, வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.இராஜேஷ் கண்ணன் உத்தரவின்பேரில் வேலூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் ஆய்வாளர் பேபி தலைமையில் மலைப்பகுதி பீஞ்சமந்தையில் சோதனையின் போது சிக்கிய 800 லிட்டர் கள்ளச்சாராய ஊரல்கள் அழித்தனர்.



▶ தென்காசி மாவட்டம்-காசி தர்மத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு 115- ஆவது ஜெயந்தி விழாவும், 60-வது குருபூஜை விழாவும் தென்காசி மாவட்ட தாமாக தலைவர் எஸ். ஆர். அய்யாதுரை தலைமையில் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.இந்நிகழ்ச்சியில் சண்முகையா ஒன்றிய கவுன்சிலர், தியாகராஜன் மாவட்டச் செயலாளர், முருகன் வட்டாரத் தலைவர், கார்த்திக்துரை மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர், சின்னச்சாமி வட்டார விவசாய அணித் தலைவர், முருகன் வட்டாரத் துணைத் தலைவர், முப்புடாதி என்ற துரை விவசாய அணித் தலைவர், முத்துப்பாண்டி கிராம தாமாக தலைவர், ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். தேவர் நல சங்கம் சார்பில் ரத்ததானம் நடைபெற்றது, நிகழ்ச்சியில் தாமாக சார்பில்எஸ்.ஆர் . அய்யாதுரை-யால் ஜூஸ் வழங்கி முடித்து வைக்கப்பட்டது.






▶ பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 115-வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, நந்தனத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பணியின் போது உயிர் நீத்த ராணுவ வீரர்கள், காவல் துறையினரின் நினைவு நாள்- இணை ஆணையர் ரம்யா பாரதி பங்கேற்பு

சென்னை, அக்,31

பணியின் போது உயிர் நீத்த காவல் துறையினரின் நினை நாளை முன்னிட்டு வண்ணாரப்பேட்டை காவல் மாவட்டம் திருவொற்றியூர் காவல் சரகம் சார்பில் திருவொற்றியூர் தனியார் பள்ளியில் குத்து சண்டை சிலம்பம் கபடி போட்டிகள் நடைபெற்றன.



இதையடுத்து திருவொற்றியூர் சுங்கச்சாவடி பேருந்து நிலையம் எண்ணூர் விரைவு சாலையில் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்ட சைக்கிலோத்தான் போட்டியை காவல் கட்டுப்பாட்டு துணை ஆணையர் ஆரோக்கியம் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை சைக்கிலத்தோன் போட்டியில் எண்ணூர் விரைவு சாலை வழியாக சென்று விம்கோ நகர் திருவொற்றியூர் நெடுஞ்சாலை வழியாக வந்தடைந்தனர்.

போட்டியில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு கோப்பை மற்றும் சான்றிதழ்களையும் வடக்கு மண்டல இணை ஆணையர் ரம்யா பாரதி வழங்கினார். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் திருவொற்றியூர் உதவி ஆணையர் முகமது நாசர், காவல் ஆய்வாளர் காதர் மீரான், புதுவண்ணாரப்பேட்டை காவல் ஆய்வாளர் கிருஷ்ணராஜ் சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர்.

# ஆவுடையார்கோவிலில் தக்ஸ்னாஸ்மார்ஷியல் ஆர்ட்ஸ் மற்றும் கடம்பன் சிலம்பு பாசறை கராத்தே தகுதி பட்டை வழங்கும் விழா

**ஆவுடையார்கோவில், அக்.31-**

ஆவுடையார்கோவில் அம்மா பூங்காவில் தக்ஸ்னாஸ்மார்ஷியல் ஆர்ட்ஸ் மற்றும் கடம்பன் சிலம்பு பாசறை கராத்தே தகுதி பட்டை வழங்கும் விழா நடைபெற்றது



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் அம்மா பூங்காவில் கராத்தே தகுதி பட்டே வழங்கும் விழா நடைபெற்றது தகுதி பட்டியல் வழங்குபவர் மகா குரு எம் பாலசுப்பிரமணியன் நிறுவனர் செயலாளர் அவர்களும் மற்றும் ஒன்றிய தலைமை எம் சரவணன் பயிற்சியாளர் அவர்கள் முன்னிலையில் மஞ்சள் பெல்ட் வாங்கிய வீரர் வீராங்கனைகள் 30 நபர்களும் ஆரஞ்சு பெல்ட் வாங்கிய வீராங்கனைகள் ஐந்து நபர்களும் பச்சை பெல்ட் வாங்கிய வீரர் வீராங்கனைகள் 14 நபர்களும் இதில் கலந்துகொண்டு மற்றும் ஏராளமான பெற்றோர்களும் குழந்தைகளும் இதை கண்டு மகிழ்ந்தனர் அனைத்து கராத்தே வீரர்களுக்கும் பயிற்சி அளித்து அவர்களுக்கு தகுதி பட்டய வழங்கும் விழா நடைபெற்றது

# கார் சிலிண்டர் வெடிப்பு விசாரணையில் கோயில்களை தகர்க்க ஒத்திகை பார்க்கப்பட்டது அம்பலம்

கோவை, அக்31-

கோவையில் கார் சிலிண்டர் வெடிப்பு தொடர்பான விசாரணையில், முக்கியக் கோயில்களை தகர்க்க தனது கூட்டாளிகளுடன் ஜமேஷா முபின் ஒத்திகை பார்த்தது தெரியவந்துள்ளது.

கோவை கோட்டைமேடு சங்கமேஸ்வரர் கோயில் அருகில் கடந்த 23-ம் தேதி கார் சிலிண்டர் வெடித்ததில், காரை ஒட்டி வந்த ஜமேஷா முபின்(25) உயிரிழந்தார். இது தொடர்பாக முகமது தல்கா(25), முகமது அசாருதீன்(23), முகமது ரியாஸ்(27), பெரோஸ் இஸ்மாயில்(27), முகமது நவாஸ் இஸ்மாயில்(26), அப்சர்கான்(28) ஆகியோரைப் போலீஸார் கைது செய்துள்ளனர்.

முபினின் வீட்டில் சோதனை நடத்தியதில், ரயில் நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாநகர காவல் ஆணையர் அலுவலகம், மாநகராட்சி அலுவலகம், ரேஸ்கோர்ஸ் ஆகிய 5 இடங்களில் தாக்குதல் நடத்த திட்டமிட்டு, சங்கேதக் குறியீடுகளுடன் எழுதி வைக்கப்பட்டிருந்த டைரி, வெடிகுண்டுகள் தயாரிக்கப் பயன்படும் ரசாயனம், வயர்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நிலையில், சம்பவம் நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்பு, தனது உறவினர் அப்சர்கான், முகமது அசாருதீன் ஆகியோருடன், கோவையில் உள்ள பிரசித்தி பெற்ற கோயில்களில் தாக்குதல் நடத்துவதற்காக 2 முறை முபின் ஒத்திகை நடத்தியதை போலீஸார் கண்டறிந்துள்ளனர்.

இவர்கள் 3 பேரும் இருசக்கர வாகனத்தில் கோட்டைமேடு பகுதியில் இருந்து சங்கமேஸ்வரர் கோயில், கோனியம்மன் கோயில், புலியகுளம் விநாயகர் கோயில் ஆகியவற்றுக்கு 2 முறை சென்று, ஒத்திகை பார்த்துள்ளனர். இது தொடர்பான சிசிடிவி காட்சிகளை போலீஸார் கைப்பற்றி உள்ளனர்.

பிரசித்தி பெற்ற இக்கோயில்களுக்கு பக்தர்கள் அதிகமானோர் வருவார்கள். கோயிலுக்கு பக்தர்கள் வரும் நேரம், வெடிபொருள் நிரப்பப்பட்ட வாகனத்தை எங்கு நிறுத்துவது, வாகனம் வெடித்தபின்னர் எந்தவழியில் தப்பிச் செல்வது என்பது குறித்தெல்லாம் இவர்கள் ஆய்வு செய்திருக்கலாம் என்று தெரிகிறது.

கோயில்கள், குடியிருப்புகள் உள்ளிட்ட இடங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதால்,



↑ ஜமேஷா முபின் ↑ அப்சர்கான் ↑ முகமது அசாருதீன்

பின்னணியில் பலருக்கும் தொடர்பு இருக்கலாம் என்று போலீஸாருக்கு சந்தேகம் வலுத்துள்ளது. ஒத்திகை பார்த்த 3 கோயில்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் குண்டு வெடித்திருந்தால், அதிக உயிரிழப்பு ஏற்பட்டிருக்கும்.

இதற்கிடையே, காந்திபார்க், உக்கடம் பழைய மார்க்கெட் பகுதிகளில் இருந்து காஸ் சிலிண்டர் மற்றும் 3 டிரம்களை இவர்கள் வாங்கியிருப்பதையும் போலீஸார் கண்டறிந்துள்ளனர். இதுகுறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கு தேசிய புலனாய்வு முகமையிடம் (என்ஐஏ) ஒப்படைக்கப்பட்டுள்ளது. டிஐஜி வந்தனா, கண்காணிப்பாளர் ஸ்ரீஜித் தலைமையிலான என்ஐஏ அதிகாரிகள் குழுவினர் கடந்த 23-ம் தேதி இரவு கோவைக்கு வந்தனர். தொடர்ந்து இவர்கள் கோவையில் முகாமிட்டு, மாநகர போலீஸாரிடம் பல்வேறு தகவல்களைப் பெற்றுள்ளனர். மேலும், சம்பவம் நடந்த இடத்திலும் ஆய்வு மேற்கொண்டனர். என்ஐஏ சார்பில் முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான ஆவணங்கள், பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள், விசாரணையில் கைதானவர்கள் தெரிவித்த விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்தையும் தொகுத்து, என்ஐஏ அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் பணிகளில் கோவை மாநகர போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

என்ஐஏ அதிகாரிகள் ஏற்கெனவே கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் தற்காலிக அலுவலகம் அமைத்திருந்தனர். சென்னையில் கிளை அலுவலகம் அமைக்கப் பட்டதைத் தொடர்ந்து, கோவையில் உள்ள தற்காலிக அலுவலகம் கலைக்கப் பட்டது.

இந்நிலையில், கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கு தொடர்பான விசாரணை நடத்த என்ஐஏ-க்கு தற்காலிக அலுவலகம் மற்றும் உள்ளூர் போலீஸாரை வழங்குமாறு, மாநகர காவல் துறையிடம் என்ஐஏ தரப்பில் வலியுறுத்தப் பட்டிருந்தது.

இதையடுத்து, என்ஐஏ அதிகாரிகள் விசாரணை நடத்த தற்காலிக அலுவலகம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து காவல் துறை உயரதிகாரி ஒருவர் கூறும்போது, ''என்ஐஏ அதிகாரிகள் விசாரணை நடத்துவதற்காக, அவிநாசி சாலையில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளி வளாகத்தில் தனி அலுவலகம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், விசாரணைக்கு உதவியாக 2 ஆய்வாளர்கள், 4 உதவி ஆய்வாளர்கள், 8 போலீஸார் என மொத்தம் 14 பேர் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் என்ஐஏ அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணியாற்றுவர். இவர்கள் 14 பேரும் ஏற்கெனவே கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கு தொடர்பான தனிப்படையில் இருந்தவர்கள். தேவைப்பட்டால் கூடுதல் போலீஸாரும் ஒதுக்கீடு செய்யப்படுவார்கள்'' என்றார்.

# புதுக்கோட்டையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழு சார்பில் ஒருநாள் அரசியல் வகுப்பு



புதுக்கோட்டை, அக்.31-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை மாவட்டக்குழு சார்பில் ஒருநாள் அரசியல் வகுப்பு நேற்று கட்சியின் மாவட்டக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்சியின் கல்விக்குழு மாவட்டக் கன்வீனர் அ. மணவாளன் தலைமையில் 'இடது ஜனநாயக அணி' என்ற தலைப்பில் மாநில செயற்குழு உறுப்பினர் என். குணசேகரன் உரையாற்றினார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சி. அன்புமணவாளன் தலைமையில் 'கட்சியின் செயல் திட்டம்' என்ற தலைப்பில் மாநிலக்குழு உறுப்பினர் எம். சின்னதுரை எம்எல்ஏ, உரையாற்றினார். வெகுஜன வசூல் தயாரிப்பு குறித்து மாவட்டச் செயலாளர் எஸ். கவிவர்மன் பேசினார்.

வகுப்பில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஏ. ராமையன், எஸ். சங்கர், ஏ.ஸ்ரீதர், என். பொன்னி, கே.சண்முகம், ஜி. நாகராஜன், த. அன்பழகன், சு.மதியழகன், துரை. நாராயணன், எஸ். ஜனார்த்தனன் மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கன், உபகுழு உறுப்பினர்கள் உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 115வது பிறந்த நாள் மற்றும் 60வது குருபூஜை விழா அதிமுக மரியாதை



பசும்பொன் , அக்.31-

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 115வது பிறந்தநாள் விழா மற்றும் 60வது குருபூஜை விழாவை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் நேற்று அதிமுக இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவுக்கிணங்க தலைமை அதிமுக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விசுவநாதன், செல்லூர் ராஜூ, காமராஜ், விஜயபாஸ்கர், கடம்பூர் ராஜூ, உதயகுமார், இசக்கி சுப்பையா, கீர்த்திகா முனியசாமி, பாஸ்கரன், முனியசாமி, கணேசராஜா, செந்தில்நாதன், கிருஷ்ண முரளி, ரவிச்சந்திரன், பிகே வைரமுத்து, குமார், பாப்புலர், முத்தையா ஆகியோர் தங்க கவசம் அணிவிக்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். என்று அக்கட்சியின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சென்னை நந்தனம் அண்ணா சாலையில் அமைந்துள்ள முத்துராமலிங்க தேவர் திருவுருவ சிலைக்கு கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே பழனிச்சாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு மலர்தூவி மரியாதை செலுத்திய தாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுச்சேரியில் சிறுவனை தள்ளுவண்டியில் அழைத்துச் சென்ற அரசு ஆம்புலன்ஸ் ஊழியர்கள்



புதுச்சேரி , அக்.31-

புதுச்சேரியில் ஆம்புலன்ஸ் வண்டியில் ஸ்ட்ரெச்சர் சேதமானதால் தள்ளுவண்டியில் சிறுவனை சிகிச்சைக்கு அழைத்து சென்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து ஏற்கெனவே புகார் தெரிவித்தும் அரசும், அதிகாரிகளும் கண்டுகொள்வதில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஹவுராவில் இருந்து புதுச்சேரிக்கு சனிக்கிழமைதோறும் எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்பட்டு வருகிறது. அதன்படி நேற்றுமுன்தினம் அந்த ரயில் ஹவுராவில் இருந்து புதுச்சேரிக்கு வந்து கொண்டிருந்தது. அந்த ரயிலில் கொல்கத்தாவை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பயணம் செய்தனர். அந்த ரயில் புதுச்சேரி அருகே வந்தபோது, அந்த குடும்பத்தை சேர்ந்த 15 வயது சிறுவனுக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் அந்த குடும்பத்தினர் செய்வதறியாது தவித்தனர். இதற்கிடையே அந்த ரயில் புதுச்சேரி ரயில்நிலையத்தை அடைந்ததும் ரயிலில் இருந்து இறங்கிய அவர்கள், சிறுவனை மருத்துவமனையில் சேர்க்க ஆம்புலன்சுக்கு தகவல் கொடுத்தனர்.

அதன் பேரில் புதுச்சேரி சுகாதார நிலையத்திற்கு சொந்தமான ஆம்புலன்ஸ் ரயில் நிலையத்துக்கு விரைந்து வந்தது. ஆனால் அந்த ஆம்புலன்சில் உள்ள ஸ்ட்ரெச்சர் சேதமடைந்து காணப்பட்டதால் அதனை நடைமேடைக்கு இழுத்து செல்ல முடியவில்லை. இதனால் சிறுவனை உடனடியாக சிகிச்சைக்கு அழைத்து செல்ல முடியவில்லை. தொடர்ந்து சிறுவனின் குடும்பத்தினர் அங்கிருந்த பார்சல் ஏற்றி செல்லும் தள்ளுவண்டியில் சிறுவனை படுக்க வைத்து தள்ளிக் கொண்டு ரயில் நிலையம் வெளியே இருந்த ஆம்புலன்சுக்கு அழைத்து வந்தனர். பின்னர் சிறுவனை புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

பொதுவாக ஆம்புலன்சில் முதலுதவி சிகிச்சை, ஸ்ட்ரெச்சர் உள்ளிட்ட வசதிகள் கட்டாயம் இருக்க வேண்டும். ஆனால் புதுச்சேரி சுகாதார நிலையத்திற்குச் சொந்தமான ஆம்புலன்சில் எந்த ஒரு வசதியும் கிடையாது. இதுகுறித்து ஆம்புலன்ஸ் டிரைவர் கூறுகையில், 'ஆம்புலன்சில் இருந்த ஸ்ட்ரெச்சர் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு சேதம் அடைந்தது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை புகார் தெரிவித்தும் புதிய ஸ்ட்ரெச்சர் வாங்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் அவசர நேரத்தில் நோயாளிகளை ஆம்புலன்சில் ஏற்றுவதற்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. புதிய ஸ்ட்ரெச்சர் வாங்க ரூ.8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை செலவு ஆகும். இது குறித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார். புதுச்சேரியில், புதுச்சேரி சுகாதாரத்துறையின் கீழ் 108 ஆம்புலன்ஸ்கள் இயக்கப்படுகின்றன. புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் என நான்கு பிராந்தியங்களிலும் 15 வாகனங்கள் இயக்கப்பட்டன. அதில் 2 வண்டிகள் பழுதானதைத் தொடர்ந்து தற்போது 13 வாகனங்கள் மட்டுமே ஓடுகின்றன.

2011ம் ஆண்டு வாங்கப்பட்ட வாகனங்கள் தான் தற்போது வரை ஓடிக் கொண்டிருக்கின்றன. 11 ஆண்டுகள் ஆகிவிட்டதால் இந்த வாகனங்கள் மோசமான நிலையில் உள்ளன. அடிக்கடி பஞ்சர் ஆகும் டயர், உடைந்து போன ஸ்டெச்சர், ஆக்சிஜன் வசதி இல்லை, முறையான பராமரிப்பு கிடையாது என ஆம்புலன்சில் உள்ள குறைபாடுகள் ஏராளம். காரைக்காலில் 5 ஆம்புலன்ஸ்களும் புதுச்சேரியில் கோரிமேடு, காலாப்பட்டு, காட்டேரிக்குப்பம், அரியூர், நெட்டப்பாக்கம், பாகூர், கரிக்கலாம்பாக்கம், தவளக்குப்பம் என 8 கொம்யூன்களிலும் ஆம்புலன்ஸ்கள் இயக்கப்படுகின்றன.

இதன் ஓட்டுனர்களுக்கு 12 ஆண்டுகளாக 9 ஆயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் வழங்கப்படுகிறது. சம்பள உயர்வு இல்லை, பணி நிரந்தரம் இல்லை, தீபாவளி போனஸ் இல்லை என்பது ஓட்டுனர்களின் குற்றச்சாட்டு. விபத்தில் சிக்கியவர்களை எடுத்துவரும் ஆம்புலன்களில் ஸ்டெச்சர் முழுமையாக சேதமடைந்து விட்டதால் அவசர நோயாளிகள் பெட்ஷீட், கைலி, வேஷ்டி, சேலை போன்றவற்றின் மூலம் தூக்கி வரக்கூடிய அவலம் புதுச்சேரியில் காணப்படுகிறது. இது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.




# பசும்பொன் சென்ற போது விபத்து முன்னாள் அமைச்சர்கள் கார் சேதம்



ராமநாதபுரம் , அக்.31-

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழா, குருபூஜை விழா நேற்று நடைபெற்றது. அஞ்சலி செலுத்த சென்ற போது மானாமதுரை அருகே முன்னாள் அமைச்சர்கள் கார் விபத்தில் சிக்கியது. பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவர் குருபூஜை விழாவையொட்டி அரசியல் கட்சி தலைவர்கள், பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் மரியாதை செலுத்தினர்.

இந்நிலையில், சிவகங்கையிலிருந்து மானாமதுரை நெடுஞ்சாலையில், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் காமராஜ், விஜயபாஸ்கர், பாஸ்கரன் உள்ளிட்டோர் பசும்பொன்னில் அமைந்துள்ள தேவர் சிலைக்கு அஞ்சலி செலுத்த சென்றனர். அப்போது, கார் ஒன்று எதிர்பாராத விதமாக குறுக்கே வந்ததாக கூறப்படுகிறது. இதனால் முன்னாள் சென்ற கார் திடீரென பிரேக் பிடித்ததால் அதிமுக முன்னாள் அமைச்சர்களின் கார்கள் வரிசையாக ஒன்றின் மேல் ஒன்று மோதிக் கொண்டது.

இதில் திருவாரூர் அதிமுக ஒன்றிய செயலாளர் பலத்த காயமுற்று அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார், மேலும், அதிமுக முன்னாள் அமைச்சர் பாஸ்கரன் கார்கள் கூட ஆறு கார்கள் சேதமடைந்துள்ளது.






பசும்பொன் தேவர் திருமகனாரின் 115வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு மதுரை கோரிபாளையத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு, முன்னாள் கவுன்சிலர் சந்தப்பேட்டை செந்தில்குமார், ராமலிங்க தேவர் சந்திரசேகர் நினைவு பாசறை சார்பாக மாலை அணிவித்து மரியாதை செய்த போது எடுத்த படம், உடன் நிர்வாகிள் மற்றம் உறுப்பினர்கள் 50 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



பசும்பொன் தேவர் திருமகனாரின் 115வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு மதுரை கோரிபாளையத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மாலை அணிவித்து மரியாதை செய்த போது எடுத்த படம். உடன் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர்கள் கோபால கிருஷ்ணன், கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.ஏ.ஏ. பாஸ்கரன், ராமமூர்த்தி, முருகேசன் மற்றும் முன்னாள் கவுன்சிலர் ஜெயக்குமார், எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் தேன் சுகுமாறன், ஒத்தக்கடை பெருமாள் அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், மகளிர் அணியினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூரில் கந்த சஷ்டி விழாவில் சூரசம்ஹார விழா





திருச்செந்தூர் , அக்.31-

திருச்செந்தூரில் கந்த சஷ்டி விழாவில் சூரசம்ஹார விழா நேற்று மாலை கோலாகலமாக நடந்தது. இதில் லட்சக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

முருக பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆண்டுதோறும் கந்தசஷ்டி திருவிழா சிறப்பாக கொண்டாடப்படும். கோவிலில் இந்த ஆண்டு கந்தசஷ்டி திருவிழா கடந்த 25-ம் தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் அதிகாலையில் நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தீபாராதனை, உதயமார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது.

காலையில் உச்சிகால அபிஷேகம், தீபாராதனைக்கு பின்னர் யாகசாலையில் சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி-தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரமாகி தீபாராதனை நடைபெற்றது. மதியம் சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி- தெய்வானையுடன் சண்முகவிலாச மண்டபத்தில் எழுந்தருளினார். மாலையில் திருவாவடுதுறை ஆதீன கந்தசஷ்டி மண்டபத்தில் எழுந்தருளிய சுவாமி-அம்பாள்களுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை நடைபெற்றது. இரவில் சுவாமி-அம்பாள்களுடன் தங்க ரதத்தில் எழுந்தருளி கிரி வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். விழாவின் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம், 6-ம் நாளான நேற்று நடைபெற்றது. இதைமுன்னிட்டு அதிகாலை 1 மணிக்கு நடைதிறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடைபெற்றது. காலை 9 மணிக்கு உச்சிகால அபிஷேகம், மதியம் 1 மணிக்கு சாயரட்சை தீபாராதனை நடைபெற்றது. மாலை 4 மணியளவில் சுவாமி ஜெயந்திநாதர் சூரசம்ஹாரத்துக்கு எழுந்தருளினார்.

சூரசம்ஹாரத்திற்காக சுவாமி ஜெயந்திநாதர் கடற்கரைக்கு வருகை தந்தார். பின்னர் முதலாவதாக யானை முகம் கொண்ட தாரகாசுரனை சுவாமி ஜெயந்திநாதர் வதம் செய்தார். இரண்டாவதாக, சிங்க முகம் கொண்ட சிங்கமுகாசுரனை சுவாமி ஜெயந்திநாதர் வேலால் வதம் செய்த நிகழ்வு நடைபெற்றது.

தொடர்ந்து, தலையை ஆட்டியபடி முருகனுடன் போரிட வந்தான் சூரபத்மன். பின்னர் தன்முகத்தோடு எழுந்தருளிய சூரபத்மனை வதம் செய்தார் சுவாமி ஜெயந்திநாதர். மாமரமாகவும், சேவலாகவும் மாறி முருகனுடன் போரிட வந்தான் சூரபத்மன். சூரனை சம்ஹாரம் செய்து சேவற்கொடியாகவும், மயிலாகவும் ஜெயந்திநாதர் ஆட்கொண்டார். விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழாவையொட்டி மாவட்ட எஸ்பி பாலாஜி சரவணன் மேற்பார்வையில், திருச்செந்தூர் டிஎஸ்பி ஆவுடையப்பன் மேற்பார்வையில் சுமார் 2,700 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# தென்காசியில் முத்துராமலிங்க தேவரின் ஜெயந்தி மற்றும் குருபூஜை விழா



தென்காசி,அக்.31-

தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் பொ.சிவாபத்மநாபன் தலைமையில், தென்காசி மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் பா. ராஜா முன்னிலையில் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 115- வது ஜெயந்தி விழாவும், 60 -வது குருபூஜை விழாவும் வல்லம், பிரானூர், தேன் பொத்தை, கரிசல் குடியிருப்பு, ஆகிய பகுதிகளில் முத்துராமலிங்கத் தேவர் குருபூஜை அனுசரிக்கப்பட்டு தேவரின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் பி. முத்துக்குமார், தேன்பொத்தை மாவட்ட திமுக பிரதிநிதி முருகேசன், படைவீட்டான் கருப்பசாமி, வல்லம் சுரேஷ், மாவட்ட பிரதிநிதி ஆர்.கே. செல்வம், சுதாகர், வடகரை பாப்பா, பண்பொழி எ. ராஜராஜன் பி. வேலுச்சாமி, டி. சங்கர், எம். முத்துராமலிங்கம், பிச்சை, வார்டு பொருளாளர் பண்டாரம், ஆகியோர் தேவர் திருமகனார் திருவிழாவில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# அரியலூரில் பொது சுகாதாரத்துறை சார்பில் நூற்றாண்டு விழா விளையாட்டு போட்டிகள் உள்பட இரண்டு நாள் விழா



அரியலூர், அக்.31-

அரியலூர் மாவட்ட பொது சுகாதாரத் துறை சார்பில் நூற்றாண்டு விழா விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் உட்பட இரண்டு நாள் விழா நடைபெற்றது.


அரியலூர் மாவட்ட விளையாட்டரங்கில் ,மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், மக்கள் சேவையில் பொது சுகாதாரத்துறை நூற்றாண்டு நிறைவு பெற்றதை கொண்டாடும் வகையில் இரண்டு நாள் விழா நடைபெற்றது. முதல் நாள் நடத்தப்பட்ட விளைப்யாட்டு போட்டிகளை, மாவட்ட ஆட்சியர் பெ. ரமண சரஸ்வதி கொடியசைத்து துவக்கி வைத்தார். சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் கீதா ராணி அனைவரையும் வரவேற்றார், மக்கள் சேவையில் பொதுசுகாதாரத்துறையின் சேவைகள் நூற்றாண்டுநிறைவுபெற்றதை விழாவாக தமிழகமெங்கும் கொண்டாடப்படுகிறது.

அதன் அடிப்படையில் அரியலூர் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் பொது சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்ட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள், தொடர்ந்து இரண்டு நாட்கள் நடத்தப்பட்டன. அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் முதல் நாள் நடைபெற்ற விழாவில் 100 மீட்டர் , 200 மீட்டர் ஓட்டப்பந்தயம் , நீளம் தாண்டுதல் , உயரம் தாண்டுதல்,குண்டு எறிதல் , வாலிபால், வட்டு எறிதல், இறகுப்பந்து, கயிறு இழுத்தல், உள்பட, பல்வேறு வகையான போட்டிகள் அரியலூர் மாவட்ட பொது சுகாதாரத் துறையில் பணியாற்றும் ஆண் , பெண் இருபாலருக்கும் தனித்தனியாக நடத்தப்பட்டன, இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கான சான்றுகளை பொது சுகாதாரத்துறை துணை இயக்குனர் கீதாராணி வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட பொது சுகாதாரத்துறை துணை இயக்குனர் கீதாராணி, வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன் , மாவட்ட விளையாட்டு அலுவலர் லெனின் , வட்டாட்சியர் கண்ணன் , பொது சுகாதாரத் துறை அலுவலக கண்காணிப்பாளர் ராமன் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் , பணியாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர், விழாமுடிவில் மாவட்டபொது சுகாதாரத்துறையின் நேர்முக உதவியாளர் குமார் நன்றிகூறினார்.




Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# கார் சிலிண்டர் வெடிப்பு கோவில்களை தகர்க்க ஒத்திகை பார்க்கப்பட்டது அம்பலம்

# தமிழக ஆளுநருக்கு முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள் கண்டனம்





# ஹாலோவீன் கொண்டாட்டத்தின்போது 151 பேர் உயிரிழப்பு


சென்னை / புதுக்கோட்டை | 31.10.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

நாராயண ஐயங்கார் , தமிழக இதழாசிரியர், ஆய்வாளர், நூலாசிரியர் (பி.1861) (இ.1947)



வல்லபாய் பட்டேல் , இந்திய அரசியல்வாதி (பி.1875) (இ.1950)



உம்மன் சாண்டி , கேரள அரசியல்வாதி, முதலமைச்சர் (பி.1943)



சர்பானந்த சோனாவால் , அசாம் மாநிலத்தின் 14வது முதலமைச்சர் (பி.1961)



## இன்றைய நினைவு நாள்

இந்திரா காந்தி , இந்தியாவின் 3வது பிரதமர் (பி.1917) (இ.1984)



எம். எல். வசந்தகுமாரி , திரைப்பட, கருநாடக இசைப்பாடகி (பி.1928) (இ.1990)



பி. லீலா , பின்னணிப் பாடகி (பி.1934) (இ.2005)

